அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IV.] DECEMBER, 1904-ஆ டிசெம்பர். [இலக்கம் 4.

சென்னை ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தாரின்

1904-ம் ஆ அறிக்கை படிக்கச் சேர்ந்த இருபத்து நான்காவது வருஷ சபை.

ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தார் முன்னிலையில் மாட்சிமைதங்கிய சென்னைக் கவர்னரவர்கள் செய்த பிரசங்கத்தின் ஸாரம்.

இச்சங்கத்தின் காரியங்கள் மிகவும் முக்கியமானவைகளென்று நாம் நினைக்கிறோம். அது விஷயமாக இன்று மாலையில் நாம் செலவழிக்கும் காலமும் ஸபலமானதென் றெண்ணுகின்றோம். இச்சங்கத் தலைவரை மிகவும் சிலாகிப்பதோடு ஜனங்களின் நன்மைக்காக அவர் பாடுபடுவதைப் பற்றியும் அவரை நாம் விசேஷமாகக் கொண்டாடுகிறோம். ஜனங்களின் க்ஷேமத்திற்கென்று ஏற்பட்டுள்ள பற்பல சாலைகளிலும் சங்கங்களிலும் போடாம் நீதியதிபர் சுறுசுறுப்புடனும் அடக்கியாளுந் திறத்துடனும் செய்துவருங் காரியங்கள் அநந்தம். உயர்வுபெற்றோங்கும் நியாயசபையில் தினந்தோறும் அருமையானதும் உழைப்புள்ளதுமான வேலைகளைச் செய்துவிட்டு அவர் தமது வீட்டிற்குத் திரும்பிப் போகும்போதெல்லாம் ஜனோபகாரமான சபைக்கு விஜயம்செய்யாத நாளே கிடையாது. உலகத்தில் பொது நன்மைக்கான காரியங்கள் பல உண்டு. அவைகள் பயன்பெறவேண்டுமானால், அக்காரியத்தில் ஒருவர் முதலில் வேலை செய்து காட்டித் தக்கதிடத்தையும் சலியாத வல்லமையையும் காட்டவேண்டும். இந்த ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தில் நீதிபதியான போடாம் என்பவர் செய்திருக்கும் காரியமோ, நாம் சொல்லியதை மீறிவிட்டது. இந்த ராஜதானியில் நல்ல எண்ணமுள்ளவர்களான பலஜாதியார்களும் இச்சங்கத்தின் தற்கால நிலையைப் பார்த்துச் சந்தோஷிக்கிறார்கள். இதர ஜனங்களும் இதைப் பார்த்து உண்மையாகவே கொண்டாடுகிறார்கள். இதற்கெல்லாம் நீதிபதியான போடாம் என்பவரே காரணமென்பதினால், அவரை நாம் உயர்த்திச் சொல்லிவிட்டோமென்று எண்ணவேண்டாம். நாம் உள்ளதையே சொன்னோம். அவருக்குப் பிராணிகளிடத்தில் கருணை மிக அதிகம். பிராணிகளைப் பற்றி அவர் செம்மையா யறிந்தவர். ஜனங்களிடத்தில் விசேஷமான அன்பும் ஆதரவும் பிழைகளைப் பொறுக்குங் குணமும் அவரிடத்திலுண்டு. இவைகள் அவரது சுபாவகுணங்களேயாம். இச்சங்கத்திற்கு அதிபதியாயிருந்து அவர் உழைத்துவருவதினாலேதான் இச்சங்கம் இப்போதுள்ள நிலைக்கு வந்திருக்கிறது. அவரது ஆதிபத்தியம் நேர்ந்துள்ள வருஷாந்தர அறிக்கைகளில் எல்லாம் இச்சங்கத்தின் அபிவிருத்திகரமான காரியங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒரு சங்கத்தைப் பரிபாலனஞ் செய்வதற்கு வேண்டிய முக்கியமான குணங்கள் அவரிடத்தி லிருக்கின்றன. காரியங்கள் பலிக்கவேண்டுமானால் கண்டனை தண்டனைகளை யொழித்துச் சில விதிகளைமட்டும் ஏற்படுத்திக்கொண்டு அவைகளின்படி நடத்திக் காட்டுவதுதான் முக்கியமென்பது அவரது கொள்கை. இச்சங்கத்தின்

உத்தேசம் கைகூடுவது அசாத்தியமென்று எண்ண வேண்டாம்; சாத்தியக்குறிகள் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளன. இவ்வகைச் சங்கங்கள் இந்தியாவில் மாத்திரமல்ல, இங்கிலாந்திலும் வேறு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டிருக்கின்றன. இங்குப்போலவே அங்கும் பலவேலைகள் செய்யப்படவேண்டும். பர்மாவின் சுற்றுப்புறங்களிலும் அப்படியே செய்யப்படவேண்டும். பிராணிகளுக்கு இம்சை செய்யலாகா தென்னும் நல்லெண்ணம் பர்மா ஜனங்களிடத்தி லிருந்தாலும், பிராணிகளிடத்தில் அன்புள்ளவர்களா யிருக்கவேணுமென்னுங் குணமே திடமாய் அதிகரித்திருக்கின்றது. இப்படி நாம் சொல்லும் காரணத்தை நீங்கள் புத்தகமூலமாய்ப் படித்தறிந்திருந்தாலு மிருக்கலாம். பர்மா பாஷை நமக்குத் தெரிந்திராவிட்டாலும் அதில் எழுதப்பட்டுள்ள புஸ்தகம் நம்மை இப்போது மயக்கிவிட்டது. அப்புஸ்தகமோ பீல்டிங்ஹால் என்பவர் எழுதியது. அதற்கு அவர் ஒரு ஜாதியாரின் ஜீவாதாரம் (The Soul of a people) என்று பெயரிட்டிருக்கிறார். இப்புத்தகத்தின் விஷயங்கள் அவருக்கு அன்பையும் மன உல்லாசத்தையும் விளைத்தன. அவைகளில் முக்கியமாக நமது மனதைக் கவர்ந்துகொண்ட ஒரு பாகத்தைமட்டும் நாம் இங்கெடுத்துக் காட்டுகிறோம். அதாவது:—

" சொற்களை ஒருவ னுணராவிடினும் அவைகளின் கருத்தை அவன் அறிகிறான் என்பது பர்மாவிலுள்ள ஜனங்களின் உறுதிமொழி. எப்படியென்றால், பிராணிகளைக் கொல்லாமலிருப்பதாகிய குணத்தைவிடப் பிராணிகளிடத்தில் பச்சாத்தாப முள்ளவர்களா யிருத்தலாகிய உத்தமகுணம் பர்மாவின் ஜனங்களிடத்தில் அதிகமாயிருக்கின்றது. பிராணிகளின் சங்கதிகளை அவர்கள் முற்றும் அறிந்திராவிட்டாலும், பிராணிகள் ஜீவித்திருக்கையில் அவைகளைக் கொல்லாதிருக்க அவைகளை அன்பாய் நடத்திவருவது முக்கியமானதென்பதை அவர்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்துக்களைப்போலவே அவர்களும் பிராணிகளைக் கொல்லாமலிருக்கவேண்டு மென்கிறார்கள். ஜீவன்களிடத்தில் எப்போதும் அன்பு பாராட்டி அவைகளைக் காப்பாற்றி வரவேண்டுமென்பதுதான் அவர்களின் முக்கியமான குணம். இந்து தேசத்திலோ, பிராணிகளை இந்துக்கள் கொல்லுகிறதில்லை; முசல்மான்கள் தாம் கொல்லுகிறவர்கள். இவ்வாறாயினும் முசல்மான்கள் அவர்களிடத்திலுள்ள பிராணிகள் விஷயத்தில் இந்துக்களைவிட அதிகமான பக்ஷமுள்ளவர்களென்று பேர் வந்திருக்கின்றது. குணத்தில் மாறுதல் இவ்வாறு நடைபெறுவது விசித்திரமானதாக இருக்கின்றது. பர்மாவிலோ இவ்விரண்டு குணங்களும் சேர்ந்திருக்கின்றன. பிராணிகளிடத்தில் அன்பு மகம்மதியர்களுக்கு இருப்பதைவிட அவர்களுக்கு அதிகமாக இருக்கின்றது. இந்துக்களைப்போலவே பிராணிவதத்தில் அஞ்சும் குணமும் அவர்களிடத்தில் உண்டு" என்பதாம்.

நாம் இங்கு எடுத்துச்சொன்ன பொது சங்கதிகளின் உண்மையைப்பற்றி நமது அபிப்பிராயத்தைச் சொல்ல நாம் துணியவில்லை. புஸ்தகத்தை எழுதினவர் சொல்வது உண்மையாயிருந்தால், பர்மாவில் நடப்பதுபோலவே பெருந்தொகையான இந்துக்களுக்குள்ளும் இந்தச் சங்கதி நடைபெறலாமென்பது சம்பாவிதமேயாம். ஆனால் வேட்டையாடும் சுவபாவமும், வேட்டையில் பிரியமுமுள்ளவர்களான அங்கிலேயர்களுக்கு அவ்வாறு செய்வது சாத்தியமாகாது. இவ்வகையான வருஷாந்தக் கூட்டங்களில் சொல்லப்படுகிறபடிக்கே இந்துக்கள் பிராணிகளின் கொலைவிஷயத்தில் நடுங்குகிறார்கள். இயற்கையாகவே அவர்கள் கொடுமையான குணம் உள்ளவர்களல்லர். அவர்கள் தவறுதலுக்கெல்லாம் காரணம் அறியாமையும், ஆலோசனைக்குறைவுமே யாம். இந்த அறியாமையும், ஆலோசனைக் குறைவும் நிவிர்த்தி செய்யப்பட்டால், வாயில்லாத பிராணிகளிடத்தில் அன்பும் பச்சாத்தாபமும் பாராட்டுவதில் அவர்கள் பர்மாவின் ஜனங்களுக்குக் குறைந்தவர்களாகமாட்டார்கள். இந்தச் சங்கத்தில் இந்துக்கள் நல்ல வேலை செய்வதற்குத் தகுந்தவர்களாய் இருக்கிறார்களென்று நாம் சொல்லத் தடையில்லை. இதுவிஷயத்தில் ஜாதி சம்பந்தமாய் நிலைத்துள்ள குணத்தை மாற்றவேண்டியது மில்லை; சமயசம்பந்தமான வழக்கத்தையாவது ஒரு குலத்தாரின் ஆசாரத்தையாவது மாற்றவேண்டியதுமில்லை. நாம் செய்யவேண்டியதெல்லாம் கூடி சொற்பமான அறியாமையையும் ஆலோசனைக் குறைவையுமட்டுமே நீக்கிவிடவேண்டியதாயிருக்கிறது.

* * * *

எல்லா ஜாதியாரிலுமுள்ள தலைவர்களால் இச்சங்கமானது களிப்புடன் ஆதரிக்கப்பட்டு வருகின்றது. அங்கிலேயர்களும் இந்துக்களும் மகம்மதியர்களும் ஒரேவிதமான எண்ணத்துடனும், உத்தேசத்துடனும், கருணையுடனும் ஏகோபித்து வேலைசெய்வதினாலேதான் இதன்வேலையைப்பற்றி நாம் விசேஷமாய் எடுத்துச்சொல்ல இடமாயிற்று. இவ்விதமாகவே எல்லோரும் ஒரேவிதமான உணர்ச்சியுடன் ஏகோபித்து வேலைசெய்து வருவது ஜனங்கள் பொதுவாகச் செய்யவேண்டிய வேலைகளின் சிறப்பை மீறிவிட்டது.

ஏற்கெனவே மிஸ்ட்டர் கிளர்க்கு துணையவர்களும், ஸ்ரீ. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களும் சங்கத்தில் நடந்த காரியங்களின் குணதோஷங்களைப் பற்றி வாசாலகமாய்ச் சொல்லவேண்டிய சங்கதி

களைக்குறித்துப் பேசியிருப்பதால் அதைப்பற்றி விஸ்தாரமாய்ச் சங்கதிகளை எடுத்துச்சொல்லி உங்களை நெடுநேரம் நிறுத்திவைக்க நாம் உத்தேசிக்கவில்லை.

ஆனல் ஒரு சங்கதியைமட்டும் நாம் எடுத்துச் சொல்லாமலிருந்தால், சொல்லாமல் விட்டுவிட்ட குற்றம் நம்மைச் சாரும். இச்சங்கத்தின் கமிட்டியாராலும் மற்றவர்களாலும் கொண்டாடப்பட்ட படிக்கே ராஜா வேணுகோபால் பகதூர், அவர் சகோதரர் ராஜா வி. கிருஷ்ணன் பகதூர் இவர்களின் தயாளகுணத்தை நாமும் உள்ளன்போடு கொண்டாடுகிறோம் என்பதுதான் அந்தச் சங்கதி.

இச்சங்கத்தின் கமிட்டியார் வீதியில் அலையும் நாய்களுக்கு ஓர் தங்குமிடத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்னும் காரியம் கைகூடும்படியாக வேலை செய்ததைப்பற்றி நாம் ஆமோதிக்கிறோம். இது விஷயத்தில் நாம் உடனே உதவிசெய்ததுமன்றித் துரைத்தனத்தாரால் கிடைக்கக்கூடிய திரவிய சகாயத்திற்கும் உதவிபுரிந்தோம். இந்த ஏற்பாட்டினலே, சொந்தக்காரர்களில்லாமல் வெளியில் அலைந்து திரியும் நாய்களின் தொகை குறைந்து, அந்தவகையாய் நாய்களுக்குப் பயித்தியம் பிடிப்பதும் குறைந்துவிடுமென்று எண்ணுகிறோம்.

ஆகையால் தெருக்களில் அலைகிற நாய்களைத் தடியால் அடித்துக் கொல்வது அவசியமில்லை. அது மிகவும் கொடுமையான செய்கையாம். ஆதலால் இந்த வருஷத்திலும் சென்ற வருஷத்திலும் இந்தச் சங்கத்தின் கமிட்டியாரும் தலைவரும் நாய்களைத் தடியாலடித்துக் கொன்றுவிடலாமென்று சொல்லிய அபிப்பிராயம் நமக்குச் சம்மதமானதன்று.

* * * *

நாளது வருஷாந்த அறிக்கையில் பலஹீனமும் கிழமுமான பிராணிகளுக்கு ஓர் தங்குமிடம் அமைப்பதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் முக்கியமான சங்கதிதான். அதைக் கேட்கும்போது நமக்கு மிகவும் அதிகமான சந்தோஷம் உண்டாகிறது. நம்மால் கூடுமான வரையில் நாம் அதற்குக் களிப்புடன் உதவிபுரிவோம். இவ்வகையான ஓரிடம் அமைக்கவேண்டுமென்கிற ஆலோசனை நம்மனதில் நெடுநாளாயுண்டு. அதேவிதமான எண்ணம் வேறு பலர் மனதிலும் உதித்திருக்கலாம். நன்றியுடன் வேலைசெய்து கிழமான குதிரைமுதலிய நமது நேயமுள்ளபிராணிகளை வேலைசெய்யச் சக்தி இல்லை என்றாவது, இந்தியாவை விட்டுப் புறப்பட்டுப் போய்விடுதல் முதலிய வேறு காரணங்களினலாவது ஒருவர் அவைகளைச் சம்ரட்சணை செய்ய முடியாதபோது அவைகளைக் கொல்லும்படியாய் நேரிடுவது நமக்குக் கேட்கமுடியாத ஒரு விசனகரமானகாரியம். அவ்வகை நமது நேசங்கொண்ட கிழப்பிராணிகள் நம்மிடம் பல உண்டு. அவைகளுக்காகச் சந்தோஷத்துடன் நிலையாய் அவைகள் தங்கியிருக்க ஓர் இடம் அமைக்காவிட்டால், நாம் இந்நாட்டை விட்டுப் புறப்பட்டுப் போகும்போது என்னசெய்வோமென்று பிரதிதினமும் கவலைப்படவேண்டியிருக்கும். பிராணிகளுக்காக ராஜா வேணுகோபால் கட்டுவித்த ஒரு வைத்தியசாலையும், அலையும் நாய்களுக்காகத் தங்குமிடமும் ஏற்பட்டதுபோலவே இந்த விஷயத்திலும் சீக்கிரமே காரியம் நிறைவேறுமென்று நாம் எண்ணுகிறோம்—என்றார்.

* * * *

கடைசியாக, சென்ற வருஷத்தில் திருப்திகரமான வேலைகளைச் செய்ததைப்பற்றி இந்தச் சங்கத்தின் அதிகாரிகளுக்கு அன்புடன் வாழ்த்துமொழிகூறி அன்பும் ஆதரவும் இச்சங்கத்திற்கு மேன்மேலும் விருத்தியாக வேண்டுமென்றும் கனம்பொருந்திய கவர்னரவர்கள் கோரினர்கள்.

பிறகு நீதிபதியான கனம்: போடாம் அவர்கள், மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் அன்று சபாநாயகரா யிருந்ததைக் குறித்தும், கனம்பொருந்திய கவர்னர் அவர்களின் சீமாட்டியார் வெகுமதி கொடுப்பதற்கு உடன்பட்டதைப் பற்றியும் விருப்புடன் வந்தன மொழிகள் பகர்ந்தார்.

மாம்ச பக்ஷணமும், சாக பக்ஷணமும்.

அமெரிக்கா தேசத்தார் தாங்கள் வரவர மாமிசம் புசிப்பது குறைவுபட்டுக் காய்கிழங்குகளையே அதிகமாய்க் கையாளத்தொடங்கியதாக ஒரு பத்திரிகையில் பிரசுரஞ்செய்திருப்பதைப் பார்க்க நமக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாகிறது. அந்தப் பத்திரிகையில் சுருக்கமாகச் சொல்லியிருப்பதாவது:

அமெரிக்காவில் 1850–ம் வருஷத்தில் 100 பேர் அமெரிக்கர் 94 ஆட்டு மாம்சம் புசித்துவந்தார்கள்; இதனல், புருஷர்களும் ஸ்திரீகளும் சிறுவர்களும் உள்பட ஒவ்வொருவரும் கொஞ்சம் குறைய ஒரு ஆடு தின்றுவந்ததாக ஏற்படுகிறது. 1900–ம் ௵ 100 பேருக்கு 50 ஆடாகக் குறைவுபட்டிருக்கிறது.

பன்றி இறைச்சி புசிப்பதோ, இன்னும் அதிகமாகக் குறைவுபட்டுப்போயிருக்கிறது. எப்படியென்றல், 1850–ம் வருஷம் 100 பேர் 118 பன்றி புசித்துவந்தார்கள்; அதாவது, புருஷனே, ஸ்திரீயோ, சிறுவனே, ஒவ்வொருவருக்கு ஒரு பன்றிக்கு மேலாகிறது. 1900–௵ 43 ஆகக் குறைந்திருக்கிறது. மாட்டிறைச்சியைப் புசிப்பது 100க்கு 20 வீதம் குறைவுபட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். பால், வெண்ணெய், கோதுமை, நெல் முதலானவைகளை உண்பது வருஷத்திற்கு வருஷம் விசேஷமாக விருத்தியடைந்து வருகிறது.

இதனால், 50 வருஷகாலத்தில் மாமிசபோஜனம் 100க்கு 36 வீதம் குறைவுபட்டிருக்கிறதென்றும், தானியம் முதலான உணவு 100க்கு 80 வீதம் விருத்தியடைந்திருக்கிறதென்றும் தெளிவாக விளங்குகிறதல்லவா? இதையே நீதிநெறியாகக் கொண்டு மற்றத் தேசத்தவர்களும் ஊனுணவை யொழித்து விடுவார்களானால், அதைவிடப் பெரும் பாக்கியம் நமக்கு வேறில்லை.

இப்படியானதற்குக் காரணமென்ன வென்பதைப்பற்றிச் சற்று யோசிப்போம். ஆடு மாடு பன்றி முதலான வாயில்லா ஜந்துக்களின் விஷயத்தில் செய்யப்படும் கொடுமைகளைக் கண்டு ஜீவகாருணியமுள்ளவர்களான மனிதர்கள் மிகவும் மனம் பரிதபித்து, எளிய ஜந்துக்களை இம்சித்தாலன்றித் தமக்கு ஊனுணவு கிடைக்க வேறுவழியில்லை யென்பதைத் தெரிந்து, ஸ்திரீகளும் புருஷர்களும் மாமிசபோஜனத்தைக் கொஞ்சங்கொஞ்சமாய்க் கைசோரவிடலானார்கள் என்பது தான் அந்தக் காரணம். மேலும், ஆடுமாடுகளைக் கொலைசெய்யப் பட்டணங்களுக்கு வெளியிலிருந்து நாலைந்துநாள் வழியிலே தின்னத் தீனியும் குடிக்கத் தண்ணீருமில்லாமல் ஓட்டிக்கொண்டு வருகிறார்களல்லவா? இதனால் அந்த ஜீவன்கள் நோவு படுகின்றன. ஆகையால் அவற்றின் ஊன் உணவுக்கு ஏற்றதாகாமல் மிகவும் கெட்டுப்போய்விடுகிறது. அந்த மாமிசம் தின்பவர்களுக்குப் பலவிதமான நோய்கள் உண்டாகிவிடும்.

ஆகையால் ஜீவகாருணியத்தைப்பற்றி யோசித்தாலும், தேகாரோக்கியத்தைப்பற்றி யோசித்தாலும், மாமிச போஜனம் காலக்கிரமத்திலே கைசோரவிடத் தக்கதேயாம்.

> "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
> எங்ஙன மாளு மருள்"

என்று திருவள்ளுவ நாயனாரும் மாமிச போஜனத்தை முற்றும் விலக்கியிருக்கிறார். ஆடுமாடுகளை அப்படி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஓட்டிக்கொண்டு போகும்பொழுது கன்றுக்குட்டிகள் படுகிற வருத்தம் இப்படிப்பட்டதென்று வாயினால் சொல்லமுடியாது. அந்த வருத்தத்தை நேராகக் கண்ணாலே பார்த்த ஒருவன் மிகவும் பரிதாபப்பட்டு அன்றுமுதல் அவற்றின் மாமிசம் புசிப்பதை நிறுத்திவிட்டதாகச் சொல்லியிருக்கிறான்.

வாயில்லா ஜந்துக்கள் வயிற்றுக்கில்லாமல் வாடி வருந்த, அவைகளை இப்படித் தூரதேசங்களுக்கு ஓட்டிக்கொண்டு போவது தண்டனைக் கிடமாகுமென்று துரைத்தனத்தார் ஒரு சட்ட மேற்படுத்தினாலொழிய, இந்த வாயில்லாப் பிராணிகளுடைய வருத்தம் ஒழிய வழி உண்டாகாதென்று தோன்றுகிறது.

தன் துணையைப் பிரிந்த சிங்கம்.

பல மிருகங்களைச் சேர்த்து விநோதம் காட்டுகிற ஒரு மிருகாசயத்தில் ஒரு சிங்கம் வெகுநாளாய்த் தன் துணையான மற்றொரு சிங்கத்தோடு வசித்துக்கொண்டிருந்தது. அப்படியிருக்கத் துணையான சிங்கத்தை வேறு இடத்திற்குக் கொண்டு போய்விட்டார்கள். துணைவனைப் பிரிந்த துயரம் பொறுக்க முடியாமல் அந்தச் சிங்கம் இரண்டுவாரம் இரையெடாமலே யிருந்து கடைசியில் இறந்துபோய்விட்டது. உயிரோடு ஒரு ஆட்டை அப்பொழுது அந்தச் சிங்கத்தின் கூட்டினுள் விட்டார்கள். ஆடு சிங்கத்தைப் பார்த்துப் பயந்து கத்தியது. சிங்கமோ, அந்த ஆட்டைப் பார்த்து அதை முன்னும் பின்னுமாய்ப் புரட்டியதேதவிர அதைச் சிறிதும் துன்புறுத்தவில்லை. அந்தச் சிங்கம் 3,000 ஷில்லிங்கு விலைமதிக்கப் பெற்றிருந்தது. ஆலோசனைக்குறைவினால் பலர் மிருகாசயங்களில் இப்படி அநியாயமாய் அநேகம் அருமையான பிராணிகள் இறந்துபோகும்படி செய்கிறார்கள். இது என்ன பரிதாபம்!

பறவைகளுக்குச் செய்யும் கொடுமை.

உலகத்தில் அஜாக்கிரதையினாலும் மறதியினாலும் அநேகவிதமான கொடுமைகள் செய்யப்படுகின்றன. அன்புடன் ஆதரிக்கவேண்டிய அருமையான ஜந்துக்கள் உங்களிடத்தில் இருந்தால், அவைகளுக்கு உணவும் தண்ணீரும் கொடுக்க ஒருபொழுதும் மறந்துபோகாதேயுங்கள்.

சில நாளுக்குமுன்னே ஒரு சிறுபெண் ஒரு கிளிவைத்து வளர்த்துவந்தாள். ஒருநாள் அவள் வீட்டிலே பல பிள்ளைகளோடுகூடி விநோதமாகப் பேசி விளையாடிக்கொண்டிருந்ததனால், தன் கிளியை மறந்துபோனாள். அன்று பகலில் அவள் அந்தக் கிளிக்குச் சோறாவது தண்ணீராவது ஒன்றும் வைக்கவேயில்லை; விளையாட்டு விநோதத்தில் அவளுக்குக் கிளியின் நினைப்பு வரவேயில்லை. கிளி பட்டினி கிடந்து கடைசியில் பிராணனை விடும்படியாயிற்று. பிள்ளைகளே! நீங்கள் இதைச் சற்று யோசித்துப் பாருங்கள்! பசியெடுத்தவுடனே சோறும், தாகமெடுத்தவுடனே தண்ணீரும் கிடைக்காவிட்டால், உங்களுக்கு எவ்வளவு வருத்தமாயிருக்கும்! அப்படியே நெடுநேரம் பட்டினிகிடந்து நீங்கள் சாகும்படியிருந்தால் நீங்கள் எப்பாடுபடுவீர்கள்? ஞாபகமில்லாமல் மறந்துபோவது மிகக் கொடியதென்பது இதனால் உங்களுக்குத் தெளிவாக விளங்குகிறதல்லவா?

சகலமான வாயில்லா ஜீவன்களையும் நம்முடைய அருமையான பக்ஷிகளையும் படைத்தவர் கடவுளே. அந்தப் பறவைகளைப் பிடித்துக் கூடுக

ளில் அடைத்துவைக்க வேண்டுமென்பது அவருடைய கருத்தன்று. மேலும் அவருடைய கருத்துக்கு அது முற்றும் மாறுனது. தாம் படைத்த ஸகலமான ஜீவராசிகளும் தம்தம் இஷ்டப்படி ஓடியாடி விநோதமாக ஸஞ்சரிக்கவேண்டுமென்பதே அவருடைய உத்தேசமாம். ஆதலால், கடவுளுடைய கட்டளைக்கு நேர்விரோதமாகக் காட்டிலுள்ள பறவைகளைப் பிடித்துவந்து கூட்டிலடைப்பது கொடிய பாவமாம். பக்ஷிகளைப் பிடித்துக் கூட்டிலடைத்தவர்கள் அந்தப் பாவத்தினுல் சீக்கிரமே சிறையில் அடைக்கப்பட்டார்கள் என்று பழைய கதைகள் அநேகமுண்டு. அந்தக் கதைகளைப் படித்தறிந்துகொண்டால் ஒருவரும் பிறகு இந்தப் பொல்லாத பாவஞ்செய்யத் துணியார்களென்று நாம் உறுதியாகச் சொல்லலாம். காட்டிலுள்ள பக்ஷிகளைப் பிடித்துவந்து கூட்டிலடைத்துப் பிறகு அவைகளை அன்புடனே போஷியாமலிருப்பது இதனிலும் பொல்லாத பாவமன்ருே?

பிராணிகளைப்பற்றிய உவமைச் சொற்கள்.

வௌவாலைப்போலக் கண்தெரியாத குருடன்.

எவனுவது ஒருவன் கண்தெரியாதவன்போலத் தட்டித் தடுமாறி ஆடியசைந்து நடப்பானுனல், அவனைப் பார்ப்பவர்கள், இவன் 'வௌவாலைப் போலக் கண்தெரியாத குருடன்' என்று சொல்லி எளனம் செய்கிருர்கள். சற்று நிதானித்து யோசித்துப் பார்ப்போமானுல் இது மிகவும் ஆச்சரியமென்றே விளங்கும். ஏனென்ருல், வௌவாலுக்குப் பார்வை கிடையாதென்று நிரூபிக்க ஒரு ஆதாரத்தையும் காணேம். வௌவால் இரவில் ஸஞ்சரிக்கும் பிராணி என்பது நிச்சயம். ஆனுல், இராத்திரியில் ஸஞ்சரிக்கும் பிராணிகளுக்கெல்லாம் அநேகமாய்க் கண்கள் மிகப் பெரியவைகளாகவே யிருக்கின்றன; அப்படியிருக்க இந்த வௌவாலுக்குமாத்திரம் கண்கள் மிகச் சிறியவைகள். கண்கள் சிறியவையானுலும் வௌவால் வழி தெரியாமல் தடுமாறுகிறதென்பது ஒருபோதுமில்லை; உடம்பெல்லாம் கண்ணுயிருப்பதுபோலவே அது வழிபார்த்துப் பறந்துபோகிறது. முக்கியமாய் வௌவாலுக்குப் பரிசவுணர்ச்சி மிகவும் அதிகமென்று தெரியவருகிறது. அதன் சிறகுகளின் உட்புறத்திலுள்ள நுட்பமான மயிர்களிலும், காதின் சருமத்திலுள்ள மயிர்களிலும் பரிசவுணர்ச்சி மிகவும் அற்புதமானவகையாய் அமைந்திருக்கிறதுபோலும். அவற்ருல், கூர்மையான பார்வையுள்ள கண்களால் பார்த்து ஸஞ்சரிப்பது போலவே, ஒரு தடங்கலுமில்லாமல் அது எவ்விடத்திலும் பறந்துபோகிறது. மிகவும் காடாந்தகாரமான குகையிலும், இருள் மூடிய அறைகளிலும் சுவர்களில் முட்டிக்கொள்ளாமலும், வேறு விதமான தடங்கல்களால் தடுக்கப்படாமலும் வௌவால் சுகமாக ஸஞ்சரிக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

இப்படியிருக்க, மூக்குக்குநேராயிருக்கிற பொருளும் கண்ணுக்குப் புலப்படாமல் மயங்கித் தடுமாறி நடக்கிற மனிதனைப் பார்த்து, 'உனக்குக் கண் தெரியவில்லையோ? வௌவாலைப்போலக் குருடனுயிருக்கிருயே' என்று கூறுவது முற்றும் பொருந்தாத பேச்சல்லவோ? வௌவாலுக்கு இஷ்டமானுல் அது எப்படிப்பட்ட இடத்திலும் தடையின்றி நேராகவே நடக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. வௌவாலுடைய காரியம் கண்தெரியாமல் தடைப்பட்டதென்று இதுவரையில் சாஸ்திரப் பயிற்சி செய்யும் தத்வசாஸ்திரிகளெவரும் கண்டறிந்து கூறினவரில்லை.

சென்ற பதினெட்டாவது நூற்ருண்டிலிருந்த ஒரு பெரிய தத்வசாஸ்திரி இதைப்பற்றிச் சொல்லியிருப்பதாவது:—'நான் வௌவால்களைப் பலவிதமாகப் பரிசோதனைசெய்து பார்த்திருக்கிறேன். ஒருநாளும் ஸஞ்சரியாத புதிய விடங்களிலும் வௌவால் தான் பறந்துபோகும் வழியிலுள்ள தடங்கல்களைக் கண்டுணர்ந்து அவற்றிற்கு விலகிப் பறக்கின்றது. இது ஒரு ஆச்சரியமன்று; வௌவால் ஸஞ்சரிக்கும் ஒரு இருண்ட அறையிலே நாலாபக்கங்களிலும் குறுக்கும் நெடுக்குமாக நான் பல மெல்லிய நூல்களைக் கட்டி வைத்திருந்தேன், அந்த நூல்களில் ஒன்றிலும் அகப்பட்டுக்கொள்ளாமல் ஆச்சரியமானவகையாய் அங்கே அநேகம் வௌவால்கள் பறந்துகொண்டிருந்தன' என்று சொல்லுகிருர்.

இப்பொழுதுள்ள தத்வசாஸ்திரிகளுடைய தேர்ந்த அபிப்பிராயமென்னவென்ருல், மனிதர்களில் கண்தெரியாதவர்கள் கையினுல் தொட்டுப்பார்த்துப் பலவகை நாணயம் முதலானவைகளிலுள்ள வேறுபாட்டைக் கண்டறிந்து கொள்வதுபோலவே, வௌவாலும் தன் பரிசவுணர்ச்சியால் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளும்படி, அதற்கு இயற்கையாகவே அமைந்த மிகச் சிறிய கண்ணுக்குப் பரிசவுணர்ச்சி போதுமான உதவிபுரிகிறது. அதனுல் வௌவால் மிகவும் கூர்மையான பார்வையுள்ள பறவையென்று சொல்ல யாதொரு ஆக்ஷேபமுமில்லை என்பதாம். ஆகையால் வௌவாலைக் குருடு என்று ஒருபோதும் கருதலாகாது. சூரிய வெளிச்சத்தைப் பார்க்கப் போதுமான தீவிரமுள்ள கண் அதற்கு இல்லையானதுபற்றி, பகலெல்லாம் அசையாமலிருந்து இரவிலேயே யதேச்சையாய் இரைதேடித் திரியக் கடவுள் அவற்றிற்குக் கற்பித்திருக்கிருர்.

சிறுவர்களுக்கு ஒரு பத்திரிகை.

எமது அருமையான சிறுவர்களே! யான் உங்களைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்; அவைகளை நீங்கள் சற்று நிதானித்துப் பாருங்கள். உங்களுக்கு எப்பொழுதேனும் ஏதாவது ஒரு நோவு உண்டாயிருக்குமோ? ஏதாவது காயம் பட்டிருக்குமோ? ஏதாவது நேரிட்டிருக்குமல்லவா? அப்பொழுது அந்த வேதனை பொறுக்க முடியாமல், அது சீக்கிரத்தில் நிவிர்த்தியாகிவிடவேண்டுமென்று நீங்கள் பிரார்த்தித் திருப்பீர்களன்றோ? நோவு வருத்துவதனாலேதானே நீங்கள் அப்படிச் செய்கிறீர்கள்? அப்படியே உங்களைப்போலக் குதிரை, பசு, பூனை, நாய், எலி, பக்ஷி, பூச்சி ஆகிய எல்லா ஜீவன்களுக்கும் நோவென்பது உண்டென்று நீங்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன். உயிருள்ள எல்லா ஜந்துக்களுக்கும் நோவும் வருத்தமும் உண்டென்று உறுதியாக நினையுங்கள்.

அடித்து காயப்படுத்துவது கெட்ட காரியமென்றும், விளையாட்டுக்காகவானாலும் ஒருவன் நம்மை ஓயாமல் அடித்து உபத்திரவப் படுத்திக்கொண்டிருந்தால் அதுவும் பொறுக்கமுடியாத கஷ்டமாயிருக்குமென்றும் உங்கள் எல்லாருக்கும் தெரிந்த விஷயமன்றோ? அது நமக்கு விளையாட்டாயிராதே. நீங்கள் பசுக்களையும் பக்ஷிகளையும் பூச்சிகளையும் பிடித்து இம்சிப்பது இதேமாதிரிதான். அவைகளுக்குப் பேச வாயில்லாமையால் நீங்கள் செய்யும் உபத்திரவ மிப்படிப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ளவும் அவைகளுக்குத் திறமையில்லையன்றோ? ஆதலால், வாயில்லாத ஜந்துக்கள் விஷயத்தில் நாம் செய்யும் தீங்கு பின்னும் கேடு கெட்டதாகும்.

ஏதோ ஒரு பிராணியின்மேல் விளையாட்டுக்காகவானாலும் கல் எடுத்து எறிவதுபோன்ற கொடிய காரியமொன்று செய்ய உங்கள் மனத்தில் அபேக்ஷை உண்டாகுமானால், அப்பொழுது சற்றே நிதானித்து ஆலோசித்துப் பாருங்கள். உங்களிலும் பலிஷ்டனான ஒரு மனிதன் உங்கள்மேல் கல் எறிந்தால் உங்களுக்கு எப்படியிருக்குமென்று நினைத்துப் பாருங்கள். அப்படி ஒருவன் கல்லெறிவது உங்களுக்குப் பிரியமாயிராதே. கையிலாகாத பயங்காளியென்பவர் யார் உங்களுக்குத் தெரியுமோ? விளையாட்டுக்காக ஏதாவது ஒரு ஜந்துவை வருத்துகிறவனே கையிலாகாத கோழை நெஞ்சனும். அப்படி ஒரு ஜந்துவை வருத்துவது விளையாட்டென்று நினைப்பீர்களோ? அல்ல; அது மிகவும் வெறுக்கத்தக்க பொல்லாத காரியமாம்.

எமது சிறுவர்களே, சிறுமிகளே! கொடியவர்களாயிருப்பது உங்களுக்கே மிகவும் அபாயமான காரியமாம். ஏனென்றால், சிறுபிராயத்திலே நீங்கள் கொடியவர்களாய் இருக்கத் தலைப்பட்டால், வரவர மிகவும் கேடுகெட்டவர்களாகிவிடுவீர்கள். கொடுமை செய்கிற மனிதர்கள் கடைசியில் அநேகமாய்ச் சிறைச்சாலைக்குப் போய்ச் சேருகிறார்கள். முதலிலே அவர்கள் இதை நம்புவதில்லை; ஆனாலும், மற்றப் பாவச்செய்கைகளைப் போலவே ஜீவஹிம்சையும் உடனுக்குடனே கண்டிக்கப்படாவிட்டால், வரவர விசேஷமாக முதிர்ந்துபோகிறது. ஆகையால், சிறுவர்களே! ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஒவ்வொரு பிராணியினிடத்திலும் பக்ஷமுள்ளவர்களா யிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். சிலவேளைகளில் ஈ எறும்பு முதலான பூச்சிகள் மிகுதியாய் ஏற்பட்டு நம்மை விசேஷமாய் உபத்திரவிக்கத் தலைப்படும். அப்படிப்பட்ட காலங்களில் அவைகளைக் கொல்லவேண்டியது அவசியமாக நேரிட்டால், அந்த ஜீவன்களிடத்தில் கருணை கூர்ந்து அவைகளுக்குச் சிறிதும் உபத்திரவம் தோன்றாதபடி அதி சீக்கிரத்தில் அவைகளைக் கொன்று போடுங்கள். பிராணிகளிடத்தில் பக்ஷமாயிருக்கவேண்டிய வழிகள் பலவற்றையும் கற்றுக்கொள்ளுங்கள். ‘பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்.’ என்பது ஒளவைச்சொல் அல்லவா?

பறவைக் கூட்டைத் திருடின பையன்.

ஒரு சிறு பையன் அடிக்கடி பக்ஷிகளுடைய கூடுகளைத் திருடுவதே காரியமாயிருந்தான். தன் குஞ்சுகளைக் காணாமல், ஐயோ பாவம்! தாய்ப் பறவை எவ்வளவு கீச்சிட்டுப் புலம்பினாலும் அவன் அதைப்பார்த்து மனமிரங்குவதில்லை. சிறிய குஞ்சுகள் தாயைக் காணாமல் தவித்து இரைக்கு அல்லாடினாலும் அவன் அதைப் பார்த்துப் பரிதாபப்படுவதில்லை. அவனுடைய ஸகோதரிகள், ‘ஐயோ! இப்படி எளிய பக்ஷிக் குஞ்சுகளைப் பிடித்து இம்சிக்காதே, விட்டுவிடு’ என்று அந்தக் குஞ்சுகளிடத்தில் மனமிரங்கி அச்சிறுவனுக்கு நற்புத்தி போதித்தார்கள்; அவன் அதையும் காதில் போட்டுக்கொள்வதில்லை. அப்படியிருக்க, அவன் கூண்டைத் திருடின ஒருநாள் இராத்திரி போஜனம் செய்து தூங்கிப்போனான். தூங்குகையில் அவன் ஒரு பயங்கரமான கனாக் கண்டான். அதாவது, விகாரமான வடிவமுள்ள மிகப் பயங்கரனான ஒரு புருஷன் அவனெதிரே தோன்றி அவனைக் கையிலெடுத்துக் கொண்டு அவனுடைய தாய் தந்தையர் உற்றாருறவினர் பந்துமித்திரர் முதலானவர்க ளிருக்குமிடத்திற்கு வெகுதூரத்தில் குளிர் மிகுந்த மிகப் பயங்கரமான ஓரிடத்திற்குக் கொண்டுபோய்விட்டான். நீயேன் இப்படியென்னைத் தூக்கிக்கொண்டு போகிறாயென்று அச்சிறுவன் அக்கொடிய புருஷனைக் கேட்டதற்கு, ‘இன்றையதினம் பகலில் நீயேன் பேதையான பறவைக் குஞ்சுகளைப் பிடித்துக் கொ

ண்டுபோனாய்?' என்று கொடிய மனிதன் கேள்வி கேட்டான். அதற்கு ஒன்றும் பிரதியுத்தரம் சொல்லத் தோன்றாமல் அச்சிறுவன் உடல் நடுங்கிக் கொண்டு நின்றான். உடனே விழித்துக்கொண்டான். பிறகு அவன் தான் கண்ட கனவை நினைத்து நினைத்து இரவெல்லாம் நித்திரையே கொள்ளாமல் பயந்துகொண்டிருந்து பொழுது விடிந்தவுடனே தான் செய்த அக்கிரமமான காரியத்திற்காக மிகவும் விசனமடைந்து, தான் திருடிவந்த பறவைக்கூட்டை அப்படியே எடுத்துக்கொண்டுபோய் அதை முன் இருந்த மரத்திலேயே வைத்துவிட்டான். பிறகு தாய்ப்பறவை வந்து தன் குஞ்சுகள் கூட்டிலிருக்கக் கண்டு தானும் சந்தோஷப்பட்டுத் தன் குஞ்சுகளையும் களிப்படையச் செய்தது. இதற்குப்பிறகு அந்தச் சிறுவன் பறவைக் கூடுகளை ஒரு பொழுதும் தொட்டதேயில்லை.

பக்ஷி விற்பவனும் போர்வீரனும்.

(ஒரு உண்மையான கதை.)

மேனாட்டிலே பகைவர் கையில் பிடிபட்டுப் பல வருஷகாலம் சிறைப்பட்டிருந்த ஒரு போர்வீரன், நாட்டில் ஸமாதானமுண்டான பிறகு சிறையிலிருந்து விடுபட்டுச் சுதேசத்திற்குத் திரும்பிவந்தான். அங்கே அவன் ஒருநாள் கடைவீதி வழியாகப் போகையில் அவ்விடத்திலே வனத்தில் ஸஞ்சரிக்கும் வேடனொருவன் பல பக்ஷிகளைப் பிடித்துக் கூட்டில் அடைத்துக்கொண்டு விற்பனைக்குக் கொண்டுவந்திருந்தான். அதைப் பார்த்த போர்வீரன் உடனே அவனண்டை போய் விசாரித்து, அத்தனை பக்ஷிகளையும் அவன் விற்பதற்காகக் கடைவீதிக்குக் கொண்டுவந்திருக்கிறானென்று தெரிந்து, கூட்டிலுள்ள எல்லாப் பக்ஷிகளுக்கும் மொத்தம் விலை யென்னவென்று கேட்டு பக்ஷிக்காரன் சொன்னவிலை கொடுத்து அவன் வைத்திருந்த எல்லாப் பக்ஷிகளையும் வாங்கிக்கொண்டான். பறவை விற்போன் அதைப் பார்த்து, இவன் இத்தனை பக்ஷிகளையும் வாங்கி யென்ன செய்யப்போகிறானென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டு நிற்க, போர்வீரன் தக்ஷணமே பக்ஷிக்கூண்டைத் திறந்து அதிலுள்ள பக்ஷிகளை ஒவ்வொன்றாய் வெளியே எடுத்து வானத்தில் பறந்தோடிப் போகும்படி விட்டுவிட்டான். அதைப் பார்த்த பக்ஷிக்காரன் மிகவும் வியப்படைந்து, போர்வீரனைப் பார்த்து உமக்கென்ன பைத்தியமோ? அநியாயமாய் இத்தனை பக்ஷிகளையும் பணம் கொடுத்து வாங்கி என் வீணாய் வானத்தில் பறக்க விடுகிறீர்? என்று கேட்டான்.

அதற்கு அந்தப் போர்வீரன் பறந்துபோகும் பக்ஷிகளைப் பேரானந்தத்துடன் பார்த்துக்கொண்டே, 'அப்பா! எனக்கல்ல பைத்தியம்; உனக்குத்தான் பைத்தியம். நான் செய்ததன்று அநியாயம்; நீ செய்ததுதான் அநியாயம். என்னைப்போல நீயும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு அதன் கஷ்டத்தை அனுபவித்திருப்பாயானால், அப்பொழுது நான் செய்தது நியாயமோ அநியாயமோ உனக்கே நன்றாக விளங்கும். நாம் நம்முயிரைப்போலவே எல்லா ஜீவன்களையும் நினைக்கவேண்டும். உன்னைப்பார்க்கிலும் வலியனான ஒருவன் உன்னைப் பிடித்து இப்படி ஒரு சிறையில் அடைத்துவிட்டால் உனக்கு எப்படி இருக்கும் ஆலோசித்துப் பார் என்றான்.

அதைக்கேட்ட பக்ஷிக்காரன் அந்தப் போர்வீரனுடைய ஜீவகாருணியத்தையும் தரும சிந்தையையும் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டு, அன்றுமுதல் தானும் பக்ஷிகளைப் பிடித்துவந்து விற்கிற கொடிய வியாபாரத்தை நிறுத்திவிட்டான். பக்கத்திலிருந்து இந்த அதிசயத்தைப் பார்த்திருந்த பிரஜைகள் பலரும் அந்தப் போர்வீரனை மிகவும் கொண்டாடி, இப்படிப்பட்ட தருமபுத்தி தமக்கு உண்டாகாமல் போயிற்றே யென்று சொல்லிப் பரிதாபப்பட்டுக்கொண்டே போனார்கள்.

பசுமாடுகளுக்குச் செய்யும் கொடுமை.

பசுமாடுகளை வேகமாகத் துரத்தியோட்டுவது பொல்லாத கொடுமையாம். பிள்ளைகளைப்போலப் பசுமாடுகள் வேகமாய் ஓடுவதற்காகப் படைக்கப்படவில்லை. பசுக்களை அப்படி வேகமாக அடித்து ஓட்டி வருத்தினால் அவற்றின் பால் கெட்டுப்போய் விடும்; அதனால் அந்தப் பாலைப் பருகுகிற பிள்ளைகளுக்கும் பெரியோர்களுக்கும் நோய் உண்டாகி விடும். நாம் அப்படிப்பட்ட வாயில்லா ஜந்துவாகப் படைக்கப்பட்டிருந்தால், அப்பொழுது நமக்கு என்னென்ன காரியம் பிரியமாயிராதோ, அப்படிப்பட்ட காரியங்களை நாம் வாயில்லா ஜந்துக்களுக்குச் செய்வதே கொடுமையென்று சொல்லப்படும்.

சிறு பிள்ளைகளைப்பார்க்கிலும் பலமடங்கு பெரியவனான ஒருவன் பெருங்கூச்சலுடன் அப்பிள்ளைகளின்மேல் பாய்ந்து அவர்களைத் துரத்தி வெருட்டி அவர்கள்மேல் கல்லெடுத்து எறிந்தால் அவர்களுக்கு எவ்விதமாயிருக்கும் ஆலோசித்துப் பாருங்கள்! அப்பிள்ளைகளுக்கு அது வேடிக்கையா யிருக்குமோ, இராதே. அப்படியிருக்க, எளிய வாயில்லா ஜந்துக்களை வெருட்டித் துரத்துவதுமாத்திரம் விநோதமென்று பிள்ளைகள் நினைக்கலாமோ?

இதைப்பற்றி ஒரு பெருமாட்டி சொல்லிய சிறு கதை ஒன்று கேளுங்கள்: மிகப் பெரிதான தவளை ஒன்று ஒரு குளக்கரையில் உட்கார்ந்து ஒரு சிறு பிள்ளையின்மேல் கற்களை யெடுத்து எறிந்து, இப்பொழுது இது உனக்கு எப்படி இருக்கிறது என்று கேட்கலாயிற்று. மற்றொரு பக்கத்தில் ஒரு பெரிய தேனீ அந்தச் சிறுபிள்ளையையே சுற்றிச் சுற்றி வந்து கடித்து அவனைப் பலவிதமாகத் துன்பப்

படுத்திவிட்டது. அப்படிச் செய்தால், அந்தத் தவளையும் ஈயும் மிகவும் பயங்கரமான பொல்லாத ஜீவன்களென்று நீங்கள் சொல்லுவீர்களென்பதில் ஸந்தேஹமில்லையே? ஆனால், பிள்ளைகளே! உண்மையாக நடந்த சங்கதி இதுவன்று; இதற்கு நேர் விரோதமானது. வாய்திறந்து தங்கள் வருத்தத்தை வெளியிட்டுச் சொல்லவும், தம்மைத்தாம் காப்பாற்றிக்கொள்ளவும் திறமையில்லாத எளிய ஜந்துக்கள் விஷயத்திலே பொல்லாத பிள்ளைகளே இப்படிப்பட்ட கொடுமைசெய்யத் தலைப்பட்டவர்களாம். இப்பொழுது அந்தப் பிராணிகள் அவர்களை என்னவென்று நினைத்துக்கொள்ளும் யோசித்துப்பாருங்கள்!

ஆகையால் நமக்குப் பலவிதத்திலும் பிரயோஜனப்படுகிற பசுமாடுகளை இப்படியெல்லாம் வருத்தி இம்சிக்காமல், மிகவும் பக்ஷமாகப் பரிபாலிக்க வேண்டும். அநேகர் தம்முடைய அருமையான பசுக்களுக்கு வயிற்றுக்குப் போதுமான நல்லுணவும் கொடுக்காமல் வெயிலிலும் காற்றிலும் மழையிலும் வெளியே அல்லாட விடுகிறார்கள். ஸம்ஸாரிகளுக்குப் பசுக்களே பெரிய தனமென்றும், பசுமாடுகளைப் பரிபாலிப்பதே பெரிய தருமமென்றும் நம் முன்னோர்கள் நமக்குப் பலவாறு தெரிவித்திருப்பதுமன்றித் தாமும் அப்படி நடத்திக் காட்டியிருக்கிறார்களே. அந்த நல்லொழுக்கத்தை நாம் கைசோரவிடலாமோ? இங்கே நாம் முக்கியமாய் எடுத்துச் சொல்லவேண்டுவதொன்று உண்டு. ஜீவஹிம்சை நிவாரணத்திற்கு வேண்டிய முயற்சிகள் விசேஷமாக நடந்துவருகிற இச்சென்னைமாநகரிலும், மற்றும் பல பட்டணங்களிலும் பால் வியாபாரஞ் செய்பவர்கள் பலர் தம் வயிறே பெரிதாக வெண்ணி, தம் பசுவின் கன்றுகளுக்கு அணுவளவும் பால் விடாமல் வாய்ப்பூட்டும் போட்டுக் கன்றுகளைக் கால்சார அடிக்கிறார்களே. கன்றுகள் பல தாயின் பின்னே நடந்துபோகவும் திராணியில்லாமல் தள்ளாடிக்கொண்டு போவதைத் தெருக்கள் தோறும் பலர் பார்த்திருக்கலாம். இப்படியே பல நாள் வயிற்றுக்கில்லாமல் வருந்தி அநேகம் கன்றுகள் அநியாயமாயிறந்துபோகின்றன. தோல் கன்று காட்டித் தெருக்கள்தோறும் பால் கறப்பவரை யாவரும் பார்த்திருக்கலாம். இதைவிடப் பொல்லாத பாபம் வேறு உண்டோ? இப்படிக் கன்றுகளைக் கொல்லலாகாதென்பதற்காகவே யன்றோ, கன்றில்லாமல் கறந்த பசுவின் பாலை எவரும் பருகலாகாதென்று தரும சாஸ்திரம் முறையிடுகிறது. இந்தத் தருமத்தை நல்லோர்கள் தாம் முன்னின்று நடத்திக்காட்டித் தமக்குள்ள ஜீவகாருணியத்தை வெளியிடுவார்களானால், இவ்விதமான கொடிய பாவச்செய்கைகள் அதிசீக்கிரத்தில் ஒழிந்துபோகுமென்பதில் ஸந்தேஹமில்லை.

பாடல்களும் பழமொழிகளும் பிராணிகளைப்பற்றிச் சொல்லியவைகள்.

யானைக் கில்லை தானமும் தருமமும்.
பூனைக் கில்லை தவமும் தயையும்.
சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
முதலைக் கில்லை நீத்து நிலையும்.
முக்காலும் காக்கை முழுகிக் குளிக்கும்.
வேம்பன்றோ காக்கை விரும்புங் கனி.
ருசிகண்ட பூனை உறியை உறியைத் தாவும்.
குயிலுக்குக் குரல் அழகு மயிலுக்குத் தோகை அழகு.
சூடுகண்ட பூனை அடுப்பங்கரையில் சேராது.
பால் சட்டிக்குப் பூனை காவலாகுமா.
கழுதைக்குத் தெரியாது கஸ்தூரி வாசனை.
மயிலைக் கண்டு வான்கோழி ஆடும்.
கோழி மெரித்து குஞ்சு முடமாகுமா.
கோழியின் வாலில் கச்சையைக் கட்டினாலும் குப்பையைச் சீக்கும்.
மான் கண்ணிலும் அழகு விரைவிலும் விரைவு.
கைக் குருவியைக் கொண்டு காட்டுக் குருவியைப் பிடிக்கலாம்.
ஒரு குருவி இரையெடுக்க ஒன்பது குருவி வாய் திறக்கும்.
ஆனை விழுந்தாலும் குதிரை மட்டம்தான்.
காட்டுச்குப் புலி ஆதரவு புலிக்குக் காடு ஆதரவு.
ஆட்டுக்குத் தோற்குமா கிழப்புலி யானாலும்.
பசுமாடு கிழமானாலும் பால் ருசி போகுமா.
ஆயிரம் காக்கைக்கு ஒரு கல் போதும்.
கோழி கறுப்பானாலும் அதின் முட்டையும் கறுப்பா.
காட்டுப் புறாவுக்குப் பக்ஷமாக மன்னன் சதை அறுத்துக் கொடுத்த கதை.
ஆடு பகையும் குட்டி உறவுமா.
பேரி வாத்தியம் சுமக்கும் ஒட்டகத்துக்கு ஜீனி ஒரு பாரமா.
பேச்சுப் பேச்சு என்று பேசும், பெரும் பூனையைக் கண்டால் கீச்சு கீச்சென்னும் கிளிப்பிள்ளை.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1905.